**ஊழியர் சேம நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் சேம நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, ஊழியர் சேம நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின்

தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக | பல ஆண்டுகளாக நடைமுறையல்லாத சொத்துக்களை பெறுமானத்தேய்விடுவதில் உள்ள குறைபாடுகள் காரணமாக தற்போது பெறுமானத்தேய்வு தவறாக உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன். எனவே, 2020 ஆம் | நியமத்தின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுக்கான பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யும் பட்டோலையின் பிரகாரம் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 456.31 மில்லியன் ஆகும். அந்த சொத்துக்களிடையே தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் சொத்துக்கள் இனங்காணப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51ஆம் பிரிவின் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்படு ஆயட்காலம் மீளாய்வு செய்யப்படாது ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மீள்திருத்துவதற்கும், பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத சொத்துக்களை உரிய முறையில் கைத்தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டு முதல் நடைமுறையல்லாத சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது நிலவும் கோவிட் 19 நிலைமைக்கு மத்தியில் அதன் எதிர்கால நடவடிக்கைகளை தாமதப்படுத்த வேண்டியிருந்தது. கூடிய விரைவில் அதற்கான திருத்தங்களைச் செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தினால் பேணிச் செல்லப்படும் 08 வங்கிக் கணக்குகளுக்குரியதாக 2020 திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றுக்களில் 01 முதல் 19 வருடங்கள் வரையான காலத்தினுள் மதிப்பிழந்த காசோலைகள், வங்கிக் கூற்றில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், நேரடியான வரவு / செலவு மற்றும் இனங்காணப்படாத ஏனைய வைப்புக்களாக ரூபா 11,241 மில்லியன் கூட்டுத்தொகை மற்றும் வைப்புச் செய்யப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படாத காசுக் கட்டளைகள், தீர்வையாகாத காசோலைகள் மற்றும் வழங்கிய போதிலும் | இனங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்களுக்கு மத்தியில் ரூபா 11,389 மில்லியன் நிதியத்தின் முக்கிய வங்கிக் கணக்கு ஊடாக 2006 முதல் 2018 வரையிலான பரிவர்த்தனைகள் ஆகும். தொடர்ந்தது நிலவும் இந்த நிலுவைகளை தீர்ப்பதற்காக 2020 ஜனவரியில் ஒரு சிறப்பு திட்டம் தொடங்கப்பட்டது. கோவிட்-19 தொற்று நிலைமை காரணமாக இந்த செயற்திட்டம் தாமதமாகியுள்ளதுடன், இந்தத் திட்டத்தின் முடிவுகளைக் கருத்தில் கொண்டு தொடர்ந்தது வங்கி இணக்கக்கூற்றுக்களில் காணப்படும் நிலுவைகளை தீர்க்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கி இணக்கக்கூற்றுக்களில் உள்ள தீர்க்கப்படாத நிலுவைகளைக் கண்டறிந்து தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல். |

சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 456 மில்லியன் கூட்டுத்தொகையும், பணன்படுத்திய கணினிக் கட்டமைப்பின் வழுவொன்றாக 2006ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்ட ரூபா 141 மில்லியனுமாக ரூபா 11,838 மில்லியனான தீர்வு செய்யப்படாத மீதிகள் காணப்பட்ட போதிலும், இந்த உருப்படி இனங்காணப்பட்டு உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 996.2 | 571.28 | 424.92 | நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி உரிய அனைத்து பட்டோலைகளின் பிரகாரம் காணப்படுகின்றதா என்பது உறுதிப்படுத்தப்படும் வகையில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்படுதல். |
| (ஆ) | அங்கத்துவ நிதியங்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ள 7 கணக்குகளின் மீதிகள் | 78,582 | 46,287 | 32,295 | 'AS/400' கட்டமைப்பில் பரிவர்த்தனைகள் பண அடிப்படையில் பதிவு செய்யப்படுவதுடன், பொதுப் பேரேட்டில் உள்ள பரிவர்த்தனைகள் | மாற்றங்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து திருத்தங்களைச் செய்ய வேண்டும். |

அட்டுறு அடிப்படையில் பதிவு செய்யப்படுகின்றன. ‘AS/400’ கட்டமைப்பில் பேணப்படும் தனிப்பட்ட உறுப்பினர் கணக்கு தரவு கோப்பு மூலம் பொதுப் பேரேட்டில் பதிவேற்றுவதன் (Upload) மூலம் தினசரி நாளதுவரையாக்கப் படுகின்றது. இரு கட்டமைப்புகளின் உறுப்பினர் கணக்கு நிலுவைகள் குறித்த தினசரி பரிவர்த்தனை அறிக்கைகளை உறுதி செய்வதற்காக இந்த இரண்டு அமைப்புகளின் கணக்குகளும் தினசரி அடிப்படையில் ஒப்பிடப்படுகின்றன. அதன்படி, 2020 ஆம் ஆண்டிற்குள், 'AS/400' கட்டமைப்பில் ஏற்பட்ட அனைத்து பரிவர்த்தனைகளும் பொதுப் பேரேட்டில் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை | முன்வைக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | |
| நிலையான சொத்துக்கள் | 996.2 | • குறியீட்டு எண், வாங்கிய தேதி, செலவு, நிறுவப்பட்ட சொத்துகளின் | நிலையான சொத்து பதிவேடு பராமரிக்கப்படவி | முறையான நிலையான சொத்துப் பதிவேட்டைப் |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பிடம் போன்ற அடிப்படைத் தகவல்களைக் கொண்ட நிலையான சொத்து பதிவேடு.<br>• 2020 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் | ல்லை என்பதுடன், எதிர்காலத்தில் பராமரிக்க அறிவுறுத்தப்பட்டது. பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளை எங்கள் திணைக்களத்தின் கணக்காய்வு பிரிவுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். | பராமரித்தல் மற்றும் ஆண்டுதோறும் பொருள் மெய்மையாய்வு நடாத்துதல். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2011 ஏப்ரல் 29ஆந் திகதிய 2011/06 ஆம் இலக்க தொழில் திணைக்கத்தின் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | அலுவலகத்திற்கு முறைப்பாடு கிடைத்து 14 நாட்களுக்குள் விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனினும், தெற்கு கொழும்பு மாவட்ட தொழிலாளர் அலுவலகத்திற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட முறைப்பாடுகளில் முறையே 112 மற்றும் 394 முறைப்பாடுகள் 2021 மார்ச் கணக்காய்வு திகதி வரையிலும் விசாரித்து நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்பாடுகளை விசாரணை செய்யும் செயல்முறையின் போது துல்லியமான தகவலைப் பெறுவது மற்றும் துல்லியத்தை சரிபார்ப்பது மிகவும் கடினமானது என்பதுடன், ஊழியர்களின் கருத்துக்கு செலவிடும் நேரம் சிக்கலான பணி என்பதால் தாமதம் தவிர்க்க முடியாதது. மேலும், 2020 இல் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஊழியர்கள் கடமைக்கு அழைக்கப்பட்டதால் விசாரணைகளில் தாமதம் ஏற்பட்டது. எனினும், அவசரமான மற்றும் நேரத்தை எடுத்துக்கொள்ளும் முறைப்பாடுகளுக்கு | முறைப்பாடுகள் தொடர்பான சுற்றறிக்கையின்படி செயல்படுவதன் மூலம் உறுப்பினர்களுக்கு உயர்ந்த சேவையை வழங்குதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முன்னுரிமை அளித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (ஆ) | 1999 பெப்ரவரி 11ஆந் திகதிய 01/99 ஆம் இலக்க தொழில் திணைக்கத்தின் சுற்றறிக்கை | கொழும்பு தெற்கு மற்றும் கொழும்பு மேற்கு மாவட்ட தொழிலாளர் அலுவலகங்கள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நிலுவைப் பங்களிப்புகள் மற்றும் மிகைக் கட்டணம் அறவிடுவதற்காக தொழில் தருநர் நிறுவனங்களுக்கு இறுதி அறிவிப்புகள் வெளியிடப்பட்ட சந்தர்ப்பங்கள் முறையே 190 மற்றும் 224 இற்கு உரிய முறையே ரூபா 146.78 மில்லியன் மற்றும் ரூபா 256.12 மில்லியனான பங்களிப்பு பணம் மற்றும் மிகை அறவீடு 2021 மார்ச் 31 வரையிலும் வசூலிக்கப்பட்டிராததுடன், தாமத காலம் 3 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இறுதி அறிவிப்புகளை அனுப்பிய பிறகு தவணை நிவாரணத்திற்கான கோரிக்கைகள், மிகைக் கட்டணங்களை நீக்குவதற்கான கோரிக்கை மற்றும் அறிவிப்புகளின் திருத்தம் ஆகியவற்றால் நிலுவைப் பங்களிப்பு தொகை மற்றும் மிகைக் கட்டணங்களை வசூலிப்பதற்கான சட்டப்பூர்வ செயல்முறை தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. கோவிட் 19 தொற்றுநோய் காரணமாகவும் தாமதம் ஏற்பட்டது, இது அலுவலக வேலைகளைத் தொடர்வதற்கு இடையூறாக இருந்தது. | நிலுவைத் தொகை மற்றும் மிகைக் கட்டணங்களை அறவிடும் பணிகள் செயற்திறனான முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2002 மே 20ஆந் திகதிய 08/2002 ஆம் இலக்க தொழில் திணைக்கத்தின் சுற்றறிக்கை | பதிவு எண், நிறுவனத்தின் பெயர், முகவரி, வணிகத்தின் தன்மை, பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் கடைசி ஆய்வு தேதி ஆகியவற்றை உள்ளடக்கிய, நிறுவனப் பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டும் என்றாலும், மத்திய கொழும்பு, | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், நிறுவனத்தின் பரிசோதனை பதிவேடுகளை பேணுவதன் மூலம் பரிசோதனை காலப்பகுதியில் நிறைவு செய்தல் மற்றும் உத்தியோகத்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கு கொழும்பு மற்றும் தெற்கு கொழும்பு மாவட்ட தொழிலாளர் அலுவலகங்களால் இவ்வாறான நிறுவன பதிவேடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | | ர்களின் செயற்திறனை அளவிடுவதற்கு தேவைப்படுகின்றமை. |
| (ஈ) | 1999 பெப்ரவரி 11ஆந் திகதிய 01/99 ஆம் இலக்க தொழில் திணைக்கத்தின் சுற்றறிக்கை | 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்குரிய நிறுவன பரீட்சிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மிகை அறவீடுகள் மற்றும் பங்களிப்பு தொகையை அறவீடு செய்யும் முதல் அறிவிப்பை வெளியிடுவதற்காக 20 முதல் 455 நாட்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், இறுதித் தீர்மானத்தை வெளியிடுவதற்காக 20 முதல் 563 வரையான காலம் கடந்திருந்த 79 சந்தர்ப்பங்களும், தெற்கு கொழும்பு மற்றும் மேற்கு கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகங்கள் தொடர்பில் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், 39 சந்தர்ப்பங்களுக்கு உரிய இறுதி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டிராத 68 சந்தர்ப்பங்களுக்குரிய எதுவித அறிவித்தலும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | பதவியணி வெற்றிடங்கள் காணப்படல், கோவிட் 19 தொற்றுநோயால் அலுவலகப் பணிகளில் இடையூறு ஏற்படல், நிதியத்தின் கண்காணிப்பு தரவுத்தளம் செயல்படாதது வாய்ப்புகள் காரணமாக இந்த தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறே, தொழில் தருநர் நிறுவனங்களின் முகவரியில் உள்ள சிக்கல்கள், முதல் அறிவிப்பு அனுப்பிய பின், மிகுதியை தவணை முறையில் செலுத்துமாறு தொழில் தருநர்களிடமிருந்தான கோரிக்கைகள், மிகைக் கட்டணங்களை நீக்குவதற்கான கோரிக்கைகள் போன்ற காரணங்களால் இந்த தாமதங்கள் ஏற்பட்டன. | சுற்றறிக்கை விதிகளின்படி அறிவிப்புகளை வெளியிடுவதன் மூலம் பங்களிப்புகள் மற்றும் மிகைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 283,986 மில்லியனான இலாபமாவதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 257,741 மில்லியன் ஆகும். அதன் பிராகாரம், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 26,245 மில்லியனான அதிகரிப்பொன்றினை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் போது நிதியத்தின் முதலீடுகளிலிருந்து கிடைத்த வட்டி வருமானம் ரூபா 22,728 மில்லியனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | விபரம் | 2020ஆம் ஆண்டு | 2019 ஆம் ஆண்டு | வருமானம் அதிகரித்தல் / (குறைவடைதல்) | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| (அ) | வட்டி வருமானம் | | | | |
| i. | திறைசேரி பிணைமுறிகள் | 266,130 | 244,238 | 21,892 | 8.96 |
| ii. | திறைசேரி உண்டியல்கள் | 414 | 2,125 | (1,711) | (80.52) |
| iii. | நிலையான வைப்புக்கள் | 5,877 | 2,104 | 3,773 | 179.33 |
| iv. | மீள் கொள்வனவு உடன்படிக்கை | 521 | 1,171 | (650) | (55.51) |
| (ஆ) | இலாபப் பங்கு வருமானம் - பட்டியலிடப்படாத கம்பனிகள் | 466 | 3,674 | (3,208) | (87.32) |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் நிலையான வைப்புகளில் முதலீடு செய்வதன் மூலம் பெற்ற வட்டி வருமானம் 179.33 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், திறைசேரி உண்டியல்கள் மற்றும் மீள் கொள்வனவு ஒப்பந்தங்களில் முதலீட்டிலிருந்தான வட்டி வருமானம் முறையே 80.52 சதவீதம் மற்றும் 55.51 சதவீதத்தினால் குறைந்துள்ளது. மேலும், பட்டியலிடப்படாத நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் பெறப்பட்ட ஈவுத்தொகை வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 87.32 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்கான நிதியத்தின் முக்கியமான சில விகிதங்கள் பின்வருமாறு.

| விகிதம் | 2020 | 2019 |
|---|---|---|
| தேறிய இலாப வீதம் (%) | 85.8 | 86.0 |
| சராசரி முதலீட்டின் மீதான பெறுபேறு வீதம் (%) | 10.61 | 10.69 |
| அங்கத்துவ மீதிக்கமைவான நலன்கள் வீதம் (%) | 10.31 | 10.37 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதியத்தின் மீளாய்வாண்டுக்கான தேறிய இலாப வீதம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக 86.0 சதவீதம் முதல் 85.8 சதவீதம் வரை 0.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. முதலீட்டு வருமானம் ரூபா 259,039 இல் இருந்து ரூபா 285,419 வரையிலும் ரூபா 10.18 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. சராசரி முதலீட்டின் அடிப்படையிலான பெறுபேற்று வீதம் மற்றும் அங்கத்தவர்களின் மீதிகளின் அடிப்படையில் நலன் வீதத்தினை கடந்த

வருடத்துக்கு சமனான மட்டத்தில் பேண சபைக்கு இயலுமானதா இருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது அங்கத்தவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும் வட்டி கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 215,197 முதல் ரூபா 231,622 மில்லியன் வரையிலும் ரூபா 16,425 இனால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியத்தின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் கணக்கு நிலுவைகளை சரிபார்த்தல் ஆகியவற்றுக்காக இயந்திரங்களை பொருத்தும் செயற்திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ் 2008ஆம் ஆண்டு ரூபா 2.75 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட 05 இயந்திரங்கள் வாங்கப்பட்ட நாளிலிருந்து குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டன. அத்துடன், அவற்றில் 2 இயந்திரங்கள் 2020 செப்டம்பர் 17 அன்று கைத்தவிர்க்கப்பட்டிருந்தன. மீதமுள்ள இயந்திரங்கள் குறித்து கணக்காய்வுத் திகதி வரை தீர்மானம் எடுக்கப்படவில்லை. உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்காக 2008 ஆம் ஆண்டு ரூபா 12.61 மில்லியன் செலவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 15,000 அட்டைகள் கணினித் துறையில் விளைவற்றக் காணப்பட்டன. அட்டைகள் களஞ்சியப்படுத்தப்பட்டு சுமார் 12 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், அவை பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், அந்த செலவு நிதியத்திற்குக்கு நட்டமாகியிருந்தது. மேலும், அடையாள அட்டைக்குப் பதிலாக உறுப்பினரின் கைரேகையைப் பயன்படுத்தி மீதியை சரிபார்க்க 2015 ஆம் ஆண்டில் ரூபா 14.92 மில்லியன் செலவிடப்பட்டு 30 இயந்திரங்கள் கொள்வனவு | இந்த இயந்திரங்களின் செயல்பாடு தொடர்பான கணினி மென்பொருள் நிறுவப்பட்ட பிறகும் இயங்கிக் கொண்டே இருந்தது. பின்னர் இயந்திரங்கள் பழுதடைந்ததால் கிடப்பில் போடப்பட்டது.<br><br>அனைத்து உறுப்பினர்களுக்கும் அட்டைகள் அச்சடிப்பதற்கு அதிக செலவு ஆகும் என்பதால், அட்டைகளுக்கு பதிலாக கைரேகையை பயன்படுத்தி தகவல்களை பெறக்கூடிய கணினி புரோகிராம்களை அமைக்க ஒப்புதல் பெறப்பட்டது, அதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் மேலதிக் கட்டணம் வசூலிக்கவில்லை.<br><br>2015 இல் வாங்கப்பட்ட KIOSK இயந்திரங்கள் நிறுவப்பட்டு, நாடு முழுவதும் பரவலாகப் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படுவதுடன், அவ்வப்போது மேற்கொள்ளப்படும் பழுதுபார்ப்புகளுக்குப் பிறகு 2018 டிசம்பர் 31 க்குள் 20 இயந்திரங்களை இயக்கத்தில் பராமரிக்க முடிந்தது. இருப்பினும், தலைமை அலுவலகத்தில் இந்த இயந்திரங்களை மீண்டும் சேகரித்து, மீள | அங்கத்தவர் நிதியத்தின் வருவாயின் மூலம் செலவழிக்கும்போது நன்கு திட்டமிடப்பட்ட திட்டங்களின்படி திறமையாகவும், திறம்படவும் மற்றும் சிக்கனமாகவும் செயல்படுவது நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டன. அந்த இயந்திரத்திலஸ்ரீ மீதிகளை சரிபார்க்க உறுப்பினரின் கைரேகை மறுபதிவு திட்டத்தின் கீழ் அது கணினிமயமாக்கப்பட வேண்டும் என்றாலும் 2020 டிசம்பர் 31 இல் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,053,342 மட்டுமே என்பதுடன், திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படவில்லை எனன்பதுடன், 2019 மார்ச் 01ஆந் திகதியில் உள்ளபடியாக 13 இயந்திரங்கள் செயலிழந்தமையின் அடிப்படையில் இயந்திரங்களை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 30 இயந்திரங்களை அப்புறப்படுத்த முடிவு செய்யப்பட்ட போதிலும், 2021 ஏப்ரல் கணக்காய்வு திகதி வரையிலும், உரிய இயந்திரங்கள் தலைமை அலுவலகத்திற்கு கொண்டு வரப்படவில்லை. அதன்படி, இந்த திட்டத்தை வெற்றிகரமாக முடிக்கத் தவறியதால் திட்டத்தின் மொத்த ஒட்டுமொத்த கிரயமும் நிதியத்திற்கு நட்டமாகியிருந்தது. | பயன்படுத்தக்கூடிய உதிரிபாகங்களை பயன்படுத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள போதிலும், தற்போது தீவிரமான கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக, அதற்கு பணியாளர்களை ஈடுபடுத்த முடியவில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கத்தவர்களின் பங்களிப்புகள் தொடர்பில் 2013 இல் செலுத்தப்பட்ட வருமான விகிதம் 11 சதவீதமாக இருந்ததுடன், 2014ல் இது 10.5 சதவீதமாக குறைந்துள்ளது. 2014 முதல் 2017 வரை இந்த விகிதமானது தொடர்ச்சியாக நிலையானதாக இருந்தாலும், 2018 ஆம் ஆண்டிலிருந்து இது படிப்படியாகக் குறைந்து, மீளாய்வாண்டில் 9 சதவீதமாகக் குறைந்துள்ளது. | அந்த ஆண்டிற்கான வருமானம், செலவுகள், உறுப்பினர் இருப்பு மற்றும் சந்தை சராசரி வட்டி விகித நடத்தை ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு வட்டி விகிதம் தீர்மானிக்கப்படுகிறது. மேலும், 2018 ஏப்ரல் 01ஆந் திகதி முதல் நடைமுறையில் உள்ள 2017 இன் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், நிதியத்தின் வருமான வரி விகிதம் 10 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் அடிப்படையில் வரி | அங்கத்தவர்களுக்கு உச்ச நலனைப் பெற்றுக்கொடுக்க இயலுமான வகையில் செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | விதிக்கக்கூடிய வருமானம் கணக்கிடப்படுகிறது. இதன் விளைவாக, நிதியத்தின் வருமான வரி செலவு படிப்படியாக அதிகரித்ததுள்ளது. | |
| (ஆ) | நிதியத்தினால் ரூபா 83,463 மில்லியன் 83 பட்டியலிடப்பட்ட கம்பனிகயில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆந் திகதியளவில் அந்த முதலீடுகளின் சந்தைப் பெறுமதி ரூபா 70,807 மில்லியன் வரையிலும் ரூபா 12,656 மில்லியனால், அதாவது 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. | பட்டியலிடப்பட்ட பங்குகளின் சந்தை விலைகள் அந்த நிறுவனங்களின் செயல்திறன் மற்றும் தற்போதைய பொருளாதார நிலைமைகளைப் பொறுத்து மாறுபடும். கிரயத்திற்கு ஒப்பாக பட்டியலிடப்பட்ட பங்குகள் மூலம் தொடர்புடைய தேதிக்கு தீர்வையாகாத இழப்பொன்றைக் காண்பிக்கின்றது என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆனால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2019 ஆம் ஆண்டில் நிதியத்தின் முதலீட்டு தொகுதியில் உள்ள பட்டியலிடப்பட்ட பங்குகளின் சந்தை விலையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக ரூபா 1,890 மில்லியன நட்டம் ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவு அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 2020 ஆம் ஆண்டில் அது ரூபா 5,023 மில்லியன் இலாபமாக பதிவாகியுள்ளது. | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உயர்வான நலனைப் பெற்றுக்கொடுக்க இயலுமான வகையில், ஆபத்து குறைவான சிறந்த முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது பட்டியலிடப்படாத கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடுகளிலிருந்து இரண்டு கம்பனிகளிலிருந்து மாத்திரம் ரூபா 466 மில்லியன் ஈவுத்தொகை கிடைத்திருந்தது. இது கடந்த வருடத்திற்கு ஒப்பாக 87 சதவீதமான வீழ்ச்சியாகும். | பட்டியலிடப்படாத பங்கு முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஈவுத்தொகையிலிருந்து கூடுதலான அளவானது வெஸ்ட் வரையறுக்கப்பட்ட கோஸ்ட் பவர் (தனியார்) கம்பனியை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், அதன் ஈவுத்தொகை கொடுப்பனவு முக்கியமாக இலங்கை மின்சார சபையினால் செய்யப்படும் தீர்ப்பனவுகளை பொறுத்தது. எனவே, நிதியத்தில் உள்ள பட்டியலிடப்படாத பங்குகள் முதலீட்டின் ஈவுத்தொகை வருமானத்தில் தளம்பலைக் காண்பிக்கின்றது. | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உயர்வான நலனைப் பெற்றுக்கொடுக்க இயலுமான வகையில், ஆபத்து குறைவான சிறந்த முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பட்டியலிடப்படாத கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடுகளிலிருந்து ரூபா 5,000 மில்லியன் இல்லது 56 சதவீதம் 2013ஆம் ஆண்டின் போது கென்வில் ஹோல்டிங்ஸ் ஹோட்டல் குழுமத்தினை நிர்மாணிப்பதற்காக முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் வியாபார பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராத காரணத்தால் இந்த முதலீடுகளுக்காக எந்த நலனும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும், மீளாய்வாண்டின் போதும், ‘‘த பினான்ஸ் கம்பனியின்’’ அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்பட்ட காரணத்தால் ரூபா 205 மில்லியனும் கம்பனிக்கு இழப்பாகியிருந்தது. | ‘கிரேன்ட் ஹயிட் கொழும்பு’ செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு 2020 ஆகஸ்ட் 07 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பது மற்றும் அந்த கம்பனியின் செயற்திட்ட ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் கட்டுமானம் 2020 இல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், கம்பனி அதன் முதல் கட்டத்தை 2021 டிசம்பர் 27 ஆந் திகதிக்குள் திறக்க திட்டமிட்டுள்ளது என்பதை நிதியம் அறிந்திருக்கிறது. அதன்படி வணிக நடவடிக்கைகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | முதலீடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களுக்கு உயர்வான நலனைப் பெற்றுக்கொடுக்க இயலுமான வகையில், ஆபத்து குறைவான சிறந்த முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியத்தின் அங்கத்துவ நிதியத்தினுள் உள்ள தொழில் ஆணையாளர் கணக்கில் தொழில் தருநர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதன் மூலம் திணைக்களத்தால் அறவிடப்பட்டிருந்த ரூபா 10,486 மில்லியனான தொகை மற்றும் அவ்வாறு வழக்கு தொடரப்பட்டு அறவிடப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படும் வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 453 மில்லியனான தொகையை ஒவ்வொரு அங்கத்துவ கணக்கிற்கும் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தொழில் தருநரின் | குறைபாடுள்ள ‘‘சீ’’ அறிக்கைகளை சம்பந்தப்பட்ட தொழில் தருநர்களுக்கு அனுப்பும்போது, நாடு முழுவதும் தொற்றுநோய் நிலைமை காரணமாக தாமதம் ஏற்பட்டது. தனிப்பட்ட உறுப்பினர் கணக்கு வைப்பதை விரைவுபடுத்த, Web based application/ Mobile application மற்றும் தானியங்கு உறுப்பினர் கணக்கைப் புதுப்பிப்பதற்கான புதிய தொழில்நுட்பக் கருவியொன்று உருவாக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. உரிமைகோரப்படாத நலன்கள் கணக்கு மற்றும் தக்கவைக்கப்பட்ட நலன்கள் கணக்கு ஆகியவை சரியான | தீர்ப்பனவு செய்யப்படாத பங்களிப்பு பணத்தை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு செயற்திறனான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| பெயரில் தனித்தனியாக பேணிச் செல்லப்படும் “நடைமுறை ஆண்டின் பங்களிப்பு பணம் இலக்கம் 01” எனும் பெயரிலான கணக்கின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 65,865 மில்லியன் மீதியானது உரிய அங்கத்தவர்களை இனங்கண்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிறுத்தி வைக்கப்பட்ட நலன்கள் மற்றும் உரித்து கோரப்படாத நலன்களாக ரூபா 925 மில்லியனும் குறை/மிகைப் பங்களிப்பு பணமாக ரூபா 1,984 மில்லியனும் குறை/மிகை நலன்களை செலுத்தலாக ரூபா 682 மில்லியனும் அங்கத்துவ நிதியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த அங்கத்துவக் கணக்குகளில் செலவு வைக்கப்படாது காணப்படும் கணக்குகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2013, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அரச கணக்குகள் குழுவினாலும் கட்டளையிடப்பட்டிருந்தது. | அனுமதி கடிதங்களைப் பெற்ற பிறகு தீர்க்கப்படும். | |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மெஹேவர பியச அலுவலக வளாகத்தின் உட்புறப் பகிர்வுகளை (Interior Partitions) வடிவமைப்பதற்காக அரசாங்கப் பெறுகைகள் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல் கட்டிடத் | கட்டிடங்கள் திணைக்களம் அரசாங்க நிறுவனம் என்பதாலும், கடந்த காலங்களில் எமது திணைக்களத்தின் நிர்மாணப் பணிகள் கட்டிடத் திணைக்களத்தினால் | பெறுகைகள் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நிதியை திறமையாகவும் ஆக்கபூர்வமானதாகவும் பயன்படுத்துவதன் மூலமும் கொள்முதல் |

திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 135.3 மில்லியன் தொகையான மொத்தக் கிரய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு அந்த முழுத் தொகையும் 2020 டிசம்பர் 31 அன்று கட்டிடத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டது. மேலும், அரச பெறுகைகள் வழிகாட்டியின் வழிகாட்டுதல்கள் 4.3.1 மற்றும் 4.3.2 படி, மொத்த கிரய மதிப்பீட்டுக்காக மற்றும் வழிகாட்டி இலக்கம் 2.14.1 இன் படி குறித்த திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் பரிந்துரைகளுக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் ஒப்புதல் பெறப்படவில்லை என்பதுடன், வழிகாட்டி எண் 8.9.3 இன் படி ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, வழிகாட்டி எண். 5.4.4 (i) க்கு மாறாக, முழு ஒப்பந்தங்களின் மதிப்பும் செயல்பாடுகளை தொடங்குவதற்கு முன்பே செலுத்தப்பட்டதுன், வழிகாட்டி எண் 5.4.6 (ஆ) இன் படி எந்தப் படிகாசும் பராமரிக்கப்படவில்லை. மேலும், 2021 மார்ச் 31 வரையிலும் உள்ளக பகிர்வுகளின் வடிவமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

மேற்கொள்ளப்படும் போது முழுத் தொகையையும் கட்டிடத் திணைக்களத்திற்கே செலுத்தித் திணைக்களம் பழகியிருந்ததாலும், முழுத் தொகையும் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டது.

கோவிட் - 19 நிலைமைக்கு மத்தியில் கிரமமாக சேவைக்கு சமூகமளிப்பதற்கு தடை நிலவிய காரணத்தால் மற்றும் போதுமான நேரம் இல்லாததால் இந்த பணிகளை கூறுவிலை கோராது கட்டிடங்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்ட காரணத்தால் மற்றும் விவரக்குறிப்புகளைத் தயாரிக்க நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அவ்வாறு செய்யாத காரணத்தால் கிரய மதிப்பீடு தொழில்நுடம்ப மதிப்பீட்டு குழுவிடம் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்படவில்லை மற்றும் கட்டிடத் திணைக்களத்தின் தகைமை வாய்ந்த அதிகாரிகள் குழுவால் இந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ரூபா 100 மில்லியனுக்கும் அதிகமான மொத்த கிரய மதிப்பீடு வரிசை அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறுவதில் சிரமம் இருந்ததால் எதிர்காலத்தில் அதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

செய்யப்பட வேண்டும்.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் நலன்புரி நிதியம் ஒரு சுயாதீனமான உள்ளக கணக்காய்வு பிரிவைக் கொண்டிருக்கவில்லை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் நடத்தப்படுகிறது. நிதியத்தை நிர்வகிக்கும் தொழில் திணைக்களத்தின உளளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 14 பேர் ஆன போதிலும், உண்மையான எண்ணிக்கை 09 மட்டுமே இருந்தது. நிதியத்தினால் சுமார் ரூபா 2.8 டிரில்லியன் உறுப்பினர் நிதியை இந்த நிதியம் நிர்வகிப்பதால், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு பலப்படுத்தப்பட வேண்டியுள்ளதாக 2013 ஆம் ஆண்டு முதல் அரசாங்க கணக்குகள் குழுவினால் தொடர்ச்சியாக அறிவுறுத்திய போதிலும், போதுமான பணியாளர்களை இணைத்து கணக்காய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டுக்காக நிதியத்தால் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் மீளாய்வாண்டுக்காக வெளியிடப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இலங்கை மத்திய வங்கியின் சேம நிதிய திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு பணிகள் இலங்கை மத்திய வங்கியின் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படுவதுடன், நிதிச் சபையின் அங்கத்தவர் ஒருவரின் பங்கேற்புடனான ஆலோசனைக் கணக்காய்வுக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்படும். | போதுமளவான உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்ள இயலுமான வகையில் உள்ளகக் கணக்காய்வு பலப்படுத்தப்பட வேண்டும். |